**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S. No. 491/2022**

**Witness PW 1**

பெயர் வேல்முருகன் த/பெ மாசிலாமணி

இன்று (05.03.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

நானும் பிரதிவாதியும் ஒரே ஊர் என்றால் சரிதான் . சிறுவயதிலியே இருந்து தெரிந்தவர் என்றால் சரியல்ல. இருவருக்கும் பூர்விகம் அதே தான் என்றால் இல்லை நான் வேறு ஊரில் இருந்து வந்தேன் நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் தனியார் கார் டிரைவர். யாராவரது அழைத்தால் செல்வேன் என்றால் சரிதான். என்னிடம் சொந்தமாக கார் இல்லை என்றால் சரிதான். நான் பணம் கொடுத்ததாக சொல்லும் தேதிக்கு எத்தனை நாட்களுக்கு முன்பாக பிரதிவாதி என்னிடம் பணம் கேட்டார் என்றால் 2 நாட்களுக்கு முன்பாக கேட்டார். நிலத்தை விற்ற பணத்தை கொடுத்தேன். நான் நிலம் விற்றதாக சொல்லும் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . எனக்கு எந்த வங்கியில் கணக்கு உள்ளது என்றால் இந்தியன் வங்கி ராதாபுரம் கிளை . நான் கார் டிரைவராக போவதால் மாதம் எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்றால் சுமார் ரூ . 4000 அல்லது 5000 கிடைக்கும். நான் பணத்தை வங்கி கணக்கிலிருந்து தான் எடுத்து கொடுத்தேன் என்றால் இல்லை.நான் தாக்கல் செய்துள்ள வா.த.சாஆ 5 வில்லங்க சான்றிதழ் படி பிரதிவாதி 2022 ம் ஆண்டு சொத்து கிரையம் பெற்றதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான் . அது தவிர

வேறு எந்த விவசாய நிலமும் இல்லை என்பதால் அந்த பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேளன் என்றால் சரிதான் . என்ன செலவுக்காக பணம் தேவைப்படுவதாக பிரதிவாதி கடன் கேட்டார் என்றால் குடும்ப செலவுக் -கு மற்றும் பயிர் செலவிற்காகவும் கேட்டார். எந்த தேதியில் கடன் கொடுத்தேன் என்றால் 15.05.2020 தேதியில் ரூ. 2,35,000/-மும் 25.05.2020 அன்று ரூ . 2,00,000/-ம் கொடுத்தேன் . நான் கடன் கொடுத்ததாக சொல்லும்கால கட்டத்தில் பிரதிவாதிக்கு விவசாய நிலம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல அப்போது வைத்திருந்தார் எவ்வளவு நிலம் வைத்திருந்தார் என்றால் 2 ஏக்கர் வைத்திருந்தார். நான் சொல்வது போல் 2 ஏக்கர் நிலம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல . 2 ஏக்கர் நிலத்திற்கு ரூ. 4,35,000/- பயிர் வைக்க அவசியபடாது என்றாலும் சரியல்ல. வா.த.சாஆ 1 மற்றும் 2 பிராமிசரி நோட்டில் உள்ள விவரங்கள் யாரால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றால் ராஜேந்திரன் என்பவர் நிரப்பினார் அதில் சாட்சியாக ராஜவேல் , சத்தியராஜன் ஆகியோர்களை அவரே அழைத்து வந்த எழுதி கொடுத்தார் . ராஜவேல் என்பவர் விழுப்புரத்தை சேர்ந்தவர் என்றால் சரியல்ல வெட்டுகாடு கிராமத்தை சேர்ந்தவர் .. ஆவணத்தை எழுதிய ராஜேந்திரன் என்பவர் விழுப்புரத்தை சேர்ந்தவர் என்றால் சரியல்ல விக்கிரவாண்டியை சேர்ந்தவர் . ஆவணம் எழுதுவதற்காக ராஜேந்திரன் விக்கிரவாண்டியிலிருந்து எங்களது கிராமத்திற்கு வந்தாரா என்றால் பிரதிவாதி தான் அவரை அழைத்து வந்தார் . ராஜவேல் எனக்கு மச்சான் உறவு என்றால் உறவு முறை தான் ஆனால் சொந்த மச்சான் கிடையாது . நிலம் விற்றதாக சொல்லும் பணம் எனது வங்கி கணக்கில் தான் செலுத்தப்பட்டது என்றால் இல்லை கையில் தான் கொடுத்தார்கள் . வருமான வரி சட்டப்படி ரூ' . 20,000/- த்திற்கு மேலான தொகை வங்கி கணக்கில் தான் செலுத்தப்படவேண்டும் உண்மையாக நிலம் விற்கு பணம் பெற்றிருந்தால் வங்கி கணக்கில்

மூலமாக தான் பெற்றிருப்பேன் பொய் என்பதால் தான் கையில் தொகையாக பபெற்றேன் என்றால் சரியல்ல. எந்த தேதியில் நிலம் விற்றேன் என்றால் 2019 ல் விற்றேன் கார் வாங்குவதற்காக நான் கையில் வைத்திருந்தேன் . எனது வழக்குரையில் மற்றும் சாட்சிய வாக்குமூலத்தில் கடன் கொடுப்பதற்கான பணத்திற்கு ஆதாரம் எப்படி வந்தது என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை . நான் ஊரில் வட்டிக்கு பணம் கொடுக்கும் வழக்கம் உள்ளவர்கள் என்றால் சரியல்ல . 2019 ம் ஆண்டு எங்கள் ஊரை சேர்ந்த தாட்சயணி என்பவர் ரூ . 50,000/- கடன் மற்றும் வட்டியுடன் கொடுக்கவில்லை என்று விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்ல என்றால் சரியல்ல . வா.த.சாஆ 1 மற்றும் 2 ஆகிய ஆவணங்களை ஒவ்வொரு விவரங்களும் ஒவ்வொரு பேனாவில் நிரப்பப்பட்டுள்ளது என்றால் பிராமிசரி நோட்டை நிரப்பிய ராஜேந்திரன் அவரது பேனாவில் எழுதினார் சாட்சிகள் நான் கொடுத்த பேனாவில் கையெழுத்து போட்டார்கள் பிரதிவாதிகள் அவர்கள் கொண்டு வந்த பேனாவில் எழுதினார்கள் . வா.த.சாஆ 1 ல் தேதி 15 என்பது திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான் . அந்த திருத்தத்தை நான் தான் வழக்கு தாக்கல் செய்யும்போது பண்ணேன் என்றால் சரியல்ல அப்போதே ராஜேந்திரன் தான் கையெழுத்து போட்டார். இரண்டு ஆவணங்களும் ஒரே நாளில் தான் தயார் செய்யப்பட்டது என்றால் இல்லை முதல் ஆவணம் அந்த தேதியில் தயார் செய்யப்பட்டது 10 நாள் கழித்து மீண்டும் அவர்களை பிரதிவாதி தான் அழைத்து வந்தார் . ராஜேந்திரன் என்பவர் தான் எனக்கு பாண்டு எழுதக்கூடியவர் என்றால் அவர் விக்கிரவாண்டி என்று தெரியும் அவர் கையெழுத்து நன்றாக இருக்கும். வா.த.சாஆ 1 மற்றும் 2 ல் அந்த ஆவணத்தை எழுதியவர் பெயர் தந்தை பெயர் , முகவரி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் . ராஜேந்திரன் என்பவரை பிரதிவாதி அழைத்து வரவில்லை என்றால் சரியல்ல ராஜேந்திரன் என்ற ஒரு

நபரே இல்லை என்றால் சரியல்ல . மே 2020 ம் ஆண்டு காலக்கட்டத்தில் கொரனா பரவல் காரணமாக அரசு ஊரடங்கு உத்தரவு அமல்படுத்துவிட்டதால் எந்த கடையும் போக்ககவரத்தும் இல்லை என்றால் சரியல்ல அரசு அனுமதியுடன் கடைகள் பொருட்கள் கொடுக்க அனுமதிக்கப்பட்டது. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்கவில்லைஎன்பதால்தான் விழுப்புரம் மாவட்ட கண்காணிப்பாளுக்கு புகார் கொடுத்தேன் என்றால் சரிதான் . அந்த புகாரில் பிரதிவாதி எனது கலெக்ஷன் ஏஜெண்ட் என்றும் அவர் மூலமாக கொடுத்த இரண்டு நபர்கள் மதுரையை சேர்ந்தவர்கள் அவர்களுக்காக பிரதிவாதி தான் பொறுப்பு என்று தான் புகார் கொடுத்திருந்தேன் என்றால் சரியல்ல. விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் நகல் மற்றும் காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் நகல் ஆகியவைகளை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . அந்த புகார் நகல்களை தாக்கல் செய்திருந்தால் உண்மை நிலவரம் தெரிந்துவிடும் என்பதால் தான் நான் தாக்கல் செய்யவில்லை „ பிரதிவாதி எனது கலெக்ஷன் ஏஜெண்ட் என்றும் அவர் மீது குற்ற நடவடிக்கை எடுக்க முடியாது என்றும் உங்களுக்கு கபாத்தியம் இருந்தால் சிவில் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியிருந்தார்கள் என்றால் சரியல்ல . நான் மீண்டும் மீண்டும் போலிசில் புகார் கொடுத்து தொந்தரவு செய்ததால் தான் பிரதிவாதி வழக்கறிஞர் மூலமாக விக்கிரவாண்டி காவல் நிலையத்திற்கும் மாவட்ட குற்ற பிரிவு துணை கண்காணிப்பாளருக்கும் மாவட்ட காண்காணிப்பாளருக்கும், எனக்கும் வா.த.சாஆ 3 வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரியல்ல. பிராமிசரி நோட்டில் உள்ள தொகையை வசூல் செய் வேண்டி தான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை ரூ . 4,35,000/- கடன் கொடுக்கவேண்டுமென்று எழுதி

கொடுத்தார் அதனால் தான் புகார் கொடுத்தேன் . சாட்சி தன்னை மாற்றிக்கொண்டு பணத்தை கேட்டதால் என்னை அசிங்கமாக திட்டி கூலி படை வைத்து காலி செய்துவிடுவேன் என்று சொன்னால் அதனால் தான் புகார் கொடுத்தேன் என்று சாட்சியம் அளிக்கிறேன். நான் அது போல் புகார் கொடுக்கவில்லை வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல பிரதிவாதி எழுதி கொடுத்ததற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல . காவல் நிலையத்தில் பிராமிசரி நோட்டில் நகல் கொடுத்தேனா என்றால் இல்லை . நிரப்பப்படாத என்னால் போர்ஜரியாக கையெழுத்திடப்பட்ட பிராமிசரி நோட் நகல் தான் போலிசில் கொடுத்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி மூலம் கொடுக்கப்பட்ட நபர்கள் தலைமறைவாகி விட்டதால் அந்த தொகையை பிரதிவாதி தா்ன் செலுத்த வேண்டுமென்பதற்காக வா .த.சாஆ 5 ல் உள்ள பிரதிவாதியின் கைகயெழுத்தை வைத்து வா .த.சாஆ 1, 2 பிராமிசரி நோட்டுகளில் போர்ஜரியாக கையெழுத்து இட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.த.சாஆ 1, 2 பிராமிசரி நோட்டு முறையான பிரதிபலனுக்கு ஏற்பட்டதல்ல என்றால் சரியல்ல . அதிலுள்ள கையெழுத்து பிரதிவாதியினுடையது அல்ல என்றால் சரியல்ல . நான் ரூ. 4,35,000/- கடன் கொடுக்குமளவிற்கு வசதி உடையவன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்-கும் நான் சொன்ன தேதியில் என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல . வா.த.சாஆ 1, 2 பிராமிசரி நோட்டு எனது உறவினர்களை வைத்து நானே தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-A. Tamilselvan)
I Additional Subordinate Judge,
Villupuram